**இரத்தினபுரி மாநகர சபையி - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இரத்தினபுரி மாநகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 219 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து இரத்தினபுரி மாநகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தப்படுகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

### 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சபையின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| (அ) | அட்டுறு செலவுகள் மற்றும் கிடைக்க வேண்டிய ஒரு தடவையில் செலுத்தும் பணம் ரூபா 38,631,466 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நாட்குறிப்பின் மூலம் மற்றும் 2024 கணக்குகளைத் தயாரிக்கும் போது சரிசெய்வேன். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | 07 நிர்மாண வேலைகளின் கடன்கொடுத்தோர் பெறுமதி ரூபா 8,846,959 அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டு கணக்குகளைத் தயாரிக்கும் போது சரிசெய்யப்படும் | -மேற்படி- |
| (இ) | ரூபா 18,301,221 தொகையான 03 நிர்மாண வேலைகள் மூலதனமாக்கப்படவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | கைதவிரப்புச் செய்த ரூபா 370,038 தொகையான சொத்துக்கள் கணக்குகளிலிருந்து நீக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

### 1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 08 கணக்கு விடயங்களின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரமான மீதிக்கும் துணைப் பதிவேடுகளின் படியாயான மீதிக்குமிடையே ரூபா 51,159,604 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | ஆராய்ந்து பார்த்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | வித்தியாசம் தீர்த்து வைக்கப்படுதல் வேண்டும். |

### 1.6.3 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | ஊக்குவிப்பு படிகளைச் செலுத்துவதற்கு சட்டரீதியான ஏற்பாடு எதுவும் இல்லாதிருந்தும் உரிமை உறுதிகளின் முத்திரை கட்டணங்களை அடையாளங் காண்பதற்கு 14 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 498,910 ஊக்குவிப்பு படிகளாக செலுத்தப்பட்டிருந்தது. | இதற்காக ஆளுநரின் அங்கிகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | முறையான அங்கீகாரமின்றி கொடுப்பனவு செய்யாதிருத்தல் வேண்டும். |
| (ஆ) | சபை அதிகார எல்லைக்கு வெளியே கலி சேவைகளை வழங்குவதற்காக செலுத்திய வாழ்க்கைச் செலவுப்படியில் 25 சதவீதமான ரூபா 596,800 தொகையை சுகாதார கண்காணிப்பாளர்களும் 22 சதவீதமானவை 05 பொதுச் சுகாதார பரிசோதகர்களும் பெற்றுக்கொண்டு மிகுதியான 47 சதவீதமானது அச்சேவையை உண்மையாக வழங்குகின்ற கலிவாகன சாரதிகளுக்கும் வேலையாட்களுக்கும் செலுத்தியிருந்தமையானது பிரச்சினைக்குரியதாகும். அவ்வாறே அந்த பொதுச் சுகாதார பரிசோதகர்களின் கடமைச் செயற்பாடுகளுக்காக ஒன்றித்த பயணச் செலவுப் படிகளையும் பெற்றுக் கொண்டிருந்தனர். | மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 188(1)(உ) பிரிவின் கீழ் கிருமிநாசினி இடம் / மலசல கூடம் தொடர்பாக கொடுப்பனவு செய்யலாம் என காட்டப்பட்டுள்து. | -மேற்படி- |

### 1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ரூபா 63,989,014 கூட்டு மொத்தமான 04 கணக்கு விடயங்களின் விபரமான பட்டோலை சமர்ப்பிக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | கணக்காய்விற்கு சான்றுகள் வழங்கப்படுதல் வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 571 (2) இன் பிரகாரம் 2015 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரையான காலம் தொடர்பாக ரூபா 2,207,916 தொகையான விதவைகள் அனாதைகள் ஓய்வூதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியத்திற்குரிய வைப்புக்கள் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. | வைப்புக் கணக்கில் மிகுதியாக உள்ள பணம் அந்த ஒவ்வொரு செயற்பாட்டின் இறுதியிலும் தீர்த்துவைக்கப்படுகின்ற து. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | தாபன விதிக் கோவையின் XIV ஆம் அத்தியாயத்தின் 12.3 ஆம் பிரிவிற்கு முரணாக ஒன்றித்த பயணச் செலவுப் படிகளைப் பெற்றுக்கொள்ளும் 10 உத்தியோகத்ரத்கள் கடமைகளுக்காக அரசாங்க வாகனங்களைப் பயன்படுத்தியிருந்தனர். 2023 ஆம் ஆண்டின் 03 மாதங்களில் மாத்திரம் அந்த வாகனங்களுக்கு எரிபொருளுக்காக ரூபா 189,256 செலவு செய்யப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் தகமையுள்ள ஒன்றித்த போக்குவரத்து படி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுட ன் அத்தியவசியமான கடமைகளுக்காக வாகனங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. | தாபன விதிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 65,567,753 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 77,075,195 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்த வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபையினால் சமர்ப்பித்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பான மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான மூலம் | 2023 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | 2022 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| வீத வரியும் வரியும் | 35,800,000 | 40,242,108 | 41,336,757 | 38,436,194 | 35,700,000 | 35,811,543 | 32,284,460 | 39,878,569 |
| வாடகை | 73,181,000 | 74,250,118 | 71,876,826 | 34,800,242 | 78,990,000 | 61,612,508 | 59,030,279 | 41,708,638 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 18,485,000 | 17,954,340 | 15,560,390 | 9,285,500 | 18,556,000 | 18,511,110 | 15,134,679 | 7,910,175 |
| ஏனைய வருமானம் | 114,306,000 | 95,783,213 | 93,617,268 | 7,464,313 | 78,061,000 | 74,082,280 | 77,594,480 | 9,154,106 |
| மொத்தம் | 241,772,000 | 228,229,779 | 222,391,241 | 89,986,249 | 211,307,000 | 190,017,441 | 184,043,898 | 98,651,488 |

#### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | தற்காலிக விளம்பரங்களுக்கா வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க கட்டணங்கள் அறவிடப்படாமையால் 2023 ஆம் ஆண்டின் 04 மாதங்களுக்காக 28 விளம்பர பலகைகளுக்காக மாத்திரம் ரூபா 137,760 வருமானம் இழக்கப்பட்டிருந்தது. கணக்காய்வினால் இது பற்றி | காணப்பட்ட பொருளாதார சிக்கலினால் கொள்கைரீதியான தீர்மானம் எடுப்பதற்கு உதவி செய்யும் குழுவினால் ரூபா 60 ஆக மீண்டும் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. தற்பொழுது பொருளாதார நிலைமை சிறப்பாகக் | கட்டணத்தை தீர்மானித்தல் அங்கீகரித்தல், பிரசித்தப்படுத்துதல், அறவீடு செய்தல் என்பவற்றை முறைமைப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காட்டியதன் பின்னர் நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்குப் பதிலாக அறவிடப்பட்ட அலகு விலையினை நிர்ணயித்து வர்த்தமானி அறவித்தலினைத் திருத்துவதற்கு ஆணையாளர் நடவடிக்கை எடுத்திருந்தார். அதனைத் தவிர்த்து 03 இலத்திரனியல் விளம்பர பலகைகளிலிருந்து 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்காக ரூபா 671,000 அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | காணப்படுவதனால் 2025 ஆம் ஆண்டின் போது மீண்டும் கட்டணத்தை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என மேலும் தெரிவிக்கிறேன். | |
| (ஆ) | 94 துன்பகரமான அல்லது ஆபத்தான கைத்தொழில்கள் அல்லது தொழில் முயற்சிகள் 2022 ஆம் ஆண்டில் அனுமதிப் பத்திரத்தினை பெற்றுக்கொண்டிருக்காததுடன் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் போது காணப்பட்ட 183 நிறுவனங்களுக்காக பொதுச் சுகாதார பரிசோதகரினால் சிபாரிசு வழங்கப்படாமையால் அனுமதிப்பத்திரத்தினை வழங்குவதற்கு முடியாதிருந்ததனால் ரூபா 1,347,000 வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் போது பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கொவிட் தடுப்பூசியினை வழங்குவதனைப் போல 2021 மற்றும் 2022 ஆம் அண்டுகளில் பாடசாலை மாணவர்களின் சுகாதார பரீட்சிப்பு நடவடிக்கைகளுக்காகவும் அதிக முன்னுரிமை வழங்க வேண்டி ஏற்பட்டிருந்தது. | பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட உப நியதிச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் உரிய தொழில் முயற்சி மற்றும் கைத்தொழில் வரி ரூபா 2,821,000 தொகை அறவிடப்பட்டிருக்காததுடன் 2021 ஆம் அண்டு மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகள் தொடர்பான நிலுவை வரி பற்றிய தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2022 ஆம் ஆண்டிற்கான வரி செலுத்தாத 69 தொழில் முயற்சிகளுக்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டிற்கான தொழில்முயற்சி வரி நிலுவைப் பணம் அறவிடப்பட்டு வருகின்றது. | நிலுவை வருமானங்களை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திண்மக் கழிவு முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் 5318 மெட்றிக் தொன் கலப்பு கழிவுப் பொருட்கள் சுற்றாடலுக்கு சாதகமற்ற நடைமுறையின் மூலம் கழிவுப் பொருள் நிலையத்தில் திறந்த சுற்றாடலில் விடுவிக்கப்பட்டிருந்தது. இதனால் பிரதேசத்தின் சுற்றாடல் ரீதியான மற்றும் சமூகரீதியான பல பிரச்சினைகளுக்கு காரணமாகும் வகையில் 2023 ஆம் ஆண்டில் பல சந்தர்ப்பங்களின் போது அந்த இடத்தில் தீவைத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | கழிவுப் பொருள் முகாமைத்துவம் ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து இந்த நிலத்தில் கழிவுப் பொருட்கள் திறந்த வகையிலேயே கொட்டப்பட்டிருந்தன. இதற்கு பல்வேறு நிறுவனங்களை தொடர்பு கொண்டு தொழில்நுட்ப மற்றும் நிதி வசதிகளைப் பெற்று உச்ச அளவிலான முயற்சிகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | திறந்த சுற்றாடலில் கழிவுப் பொருட்களைக் கொட்டுவதனை குறைத்தல் வேண்டும். |
| (ஆ) | 2023 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட 2561 மெட்ரிக் தொன் உக்குகின்ற கழிவுப் பொருட்களிலிருந்து 46 மெற்றிக் தொன் சேதனப் பசளைகளை மாத்திரம் தயாரித்தல் பிரச்சினைக்குரியதாகும். | கழிவுப் பொருட்களை அளவீடு செய்தலானது ஊகித்தலாகும். இயந்திரங்களின் செயற்பாடு பலவீனமாக இருத்தல் களஞ்சிய வசதிகளை மிகைத்துச் செல்லும் போது தயாரிப்பு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. | சேதனப் பசளை தயாரிப்பினை முறைமைப்படுத்துதல் வேண்டும். |

### 3.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | கட்டாக்காலி மாடுகளை பிடித்துச் செல்வதற்கு பொலன்னறுவை, தம்மன்ன பிரதேசத்திலுள்ள பண்ணை உரிமையாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அந்த நடவடிக்கைகளை அவதானிப்பதற்காக நகராட்சி ஆணையாளர் உள்ளடங்கலாக 05 உத்தியோகத்தர்கள் அப்பிரதேசத்தில் இரண்டு | பொதுச் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் ரூபா 58,182 செலவு செய்யப்பட்டுள்ளது. திம்புலாகல கால்நடை மருத்துவ உத்தியோகத்தரினால் எட்டு பசுக்கள் அந்த அலுவலகத்தில் சட்டரீதியாக பதிவு செய்யப்பட்டுள்ளது என எழுத்துமூலம் | கட்டாக்காலியாக நடமாடும் மாடுகளை அகற்றுதல் முறைப்படியாக செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நாட்கள் சுற்றுலாவில் ஈடுபட்டு அதற்காக ரூபா 58,182 செலவு செய்யப்பட்டிருந்தது. 2023 ஆம் ஆண்டில் 16 மாடுகள் அவ்வாறு பிடித்துச் செல்லப்பட்டிருந்தும் அந்த மாடுகள் உரிய பண்ணைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்காததுடன் அந்த மாடுகள் உயிருடன் வாழ்க்கின்றதா என்பதுவும் நிச்சமற்றதாகும். இவ்வாறான மாடுகளை வழங்குமாறு அதிகாரப் பிரதேசத்திலுள்ள பதிவுசெய்த பாற்பண்ணையாளர்கள் வேண்டுதல் விடுக்கப்பட்டிருந்தும் அது தொடர்பாக கவனம் செலுத்தாது பொலன்னறுவை பிரதேசத்திலுள்ள ஒரு பண்ணை உரிமையாளருக்கு சந்தர்ப்பம் வழங்கியிருந்தமை பிரச்சினைக்குரியதாகும். | தெரிவிக்கப்பட்டது. | |
| (ஆ) | மாநகர ஆணையாளருக்கு மாதாந்த போக்குவரத்து படியும் எரிபொருள் படியுமாக மொத்தமாக ரூபா 2,597,380 தொகை 2021 யூன் மாத்திலிருந்து 2023 ஒக்தோபர் மாதம் வரை செலுத்தப்பட்டிருந்தும் அக்காலத்திற்காக ரூபா 280,000 ஒன்றித்த பிரயாணச் செலவுப் படியும் செலுத்தப்பட்டிருந்தது. | உள்ளுராட்சி ஆணையாளரின் CS/07/04/01/01 ஆம் இலக்க 2019 ஒக்தோபர் 24 ஆந் திகதிய கடித்தின் பிரகாரம் படிகள் செலுத்தப்பட்டன. | மத்திய அரசாங்கத்தின் சுற்றறிக்கையினை மிகைத்து நடவடிக்கை எடுத்தலினை சிபாரிசு செய்ய முடியாது. |
| (இ) | மாகாண பிரதம செயலாளரின் அறிவுறுத்தல்களுக்கு முரணாக வெளிக்கள உத்தியோகத்தர் தன்மையிலான பதவியல்லாத மாநகர சபையின் நிருவாக உத்தியோகத்தர் (நிறுவனம்) பதவிக்காக 2019 நவம்பர் மாதத்திலிருந்து 2023 ஒக்தோபர் மாதம் வரை ஒன்றித்த பிரயாணச் செலவுப் படியாக ரூபா 90,000 செலுத்தப்பட்டிருந்ததுடன் அக்காலத்தில் | சென்ற நாட்களின் எண்ணிக்கையையும் செலவு செய்த எரிபொருட்களின் அளவினையம் ஏற்றுக்கொள்கிறேன். 04 ஆண்டுகளுக்காக ரூபா 2,000 ஒன்றித்த பிரயாணப் படி செலுத்தப்படுகின்றது. | தாபன விதிக்கோவை மற்றும் சுற்றறிக்கையினை மிகைத்து நடவடிக்கை எடுத்தலினை சிபாரிசு செய்ய முடியாது. |

| | | |
|---|---|---|
| கடமைகளுக்காக அவரினால் அரசாங்க வாகனங்களும் பயன்படுத்தப்பட்டிருந்தன. | | |

### 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 03 வாகனங்களை ஏலத்தில் விற்பனை செய்வதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட அனைத்து கேள்வி மனுக்களும் தீர்மானிக்கப்பட்டதனைவிட குறைவாகும். வெளியிடப்பட்ட பத்திரிகை அறிவித்தலில் ஆகக் குறைந்த கேள்வி விலை குறிப்பிடப்படாமை இதற்கு காரணமாக இருந்தது. அதற்கிணங்க அனைத்து கேள்வி மனுக்களையும் நிராகரிப்பதற்கு திர்மானிக்கப்பட்டிருந்ததுடன் இதனால் பத்திரிகை அறிவித்தலுக்காக செலவு செய்யப்பட்ட ரூபா 126,212 ஒரு விளைவற்ற செலவாக இருந்தது. | எதிர்காலத்தில் பெறுகை அறிவித்தலுக்காக ஆகக் குறைந்த விலையினை உள்ளடக்குவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | சொத்துக்களின் கைதவிர்ப்பு நடவடிக்கை முறைமைப்படுத்தப்படுதல் வேண்டும். |

### 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்காக அபிவிருத்தி செய்யப்படாத காணிகளின் அடிப்படையில் வரி அறவிடுவதற்கு வருடாந்த வருமானத்தினை வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பிரசித்தப்படுத்தி அதற்காக பிரதான வருமான பரீட்சகருக்கு எழுத்துமூலம் கடமைகள் ஒப்படைக்கப்பட்டிருந்தும் அபிவிருத்தி செய்யப்படாத காணிகளை அடையாளங்காண்பதற்கேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அபிவிருத்தி செய்யப்படாத காணிகளின் அடிப்படையில் அறவிடப்படுகின்ற வரி சம்பந்தமாக எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 1518 பாவனையாளர்களுக்கு வழங்கப்படுகின்ற குடிநீருக்காக எந்த நீர் தரப் பரிசோதனையும் அச்செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி தொடக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நீர் செயற்திட்டம் தொடங்கியதிலிருந்து இன்றுவரை நீர் தரப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. தேசிய நிர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையிடம் வேண்டுதல் விடுக்கப்பட்டுள்ளது. | நீரின் தரத்தினை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.5 ஒப்பந்த நிருவாகத்திலுள்ள குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | இரத்தினபுரி நகரத்தில் நடைபாதை அமைக்கும் போதும் சல்லிக் கற்கள் பரப்பும் போது செய்யாத வேலைக்காக ரூபா 340,615 செலுத்த்பட்டிருந்தது. | நிறுத்திவைத்தல் பணத்திலிருந்து எதிரீடு செய்வேன். | மிகைக் கொடுப்பனவினை மீள அறவீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | நேரடி வேலையாட்கள் அடிப்படையில் நிறைவேற்றிய பொல்ஹேன்கொட வீதிக்கு பொருட்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தும் பொருள் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே வேலைகள் முடிவுறுத்தப்பட்டதன் பின்னர் உள்ளபடியான அளவீட்டினைப் பெற்று பயன்படுத்திய பொருட்கள் தொடர்பான ஒரு அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் ரூபா 451,488 தொகையான பொருட்களை வழங்குதல்களின் சரியான தன்மை நிச்சயமற்றதாகும். | பதில் வழங்கப்படவில்லை. | நேரடி வேலையாட்கள் அடிப்படையில் நிர்மாண வேலைகளை நிறைவேற்றுதலையும் மேற்பார்வை செய்தலினையும் முறைமைப்படுத்துதல் வேண்டும். |
| (இ) | இரத்தினபுரி பொது நூல் நிலையத்தின் பூங்காவினை அழகுபடுத்தும் நடவடிக்கையின் போது வேலையாட்களுக்கு ரூபா 98,550 மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. | மிகையாக செலுத்திய பணத்துக்கு மிகையான வேலைகள் ஒப்பந்தக்காரரினால் நிறைவேற்றப்பட்டுள்ளதனால் நட்டம் ஏற்பட்டிருக்கவில்லை. | மிகைக் கொடுப்பனவினை மீள அறவீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | இத்தினபுரி பொதுச் சந்தையினை நிர்மாணிக்கும் போது கொங்கிரீட் வேலைக்காக கொள்வனவு செய்து இன்னும் 03 தடவைகள் பயன்படுத்தக்கூடிய ரூபா 353,260 தொகையான 87 பிளய்வூட் பலகைகளும் 1894 அடி நீளமான பலகைளும் காணாமல் போயிருந்தன. | பதில் வழங்கப்படவில்லை. | நிர்மாண வேலைகளின் மேற்பார்வையை முறைமைப்படுத்துதல் வேண்டும். நட்டங்கள் மற்றும் சேதங்கள் சம்பந்தமாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | ரூபா 406,980 இற்கு கொள்வனவு செய்து 2022 ஆம் ஆண்டில் கூரைக்கு பயன்படுத்திய 4350 சதுரஅடி அமானா சீட் 2024 சனவரி மாதமளவில் கரல் கட்டி துருப்பிடித்திருந்தும் நியம தரத்திற்கு இணக்கமற்ற அக்கொள்வனவு தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | நியமதரத்திற்கு இணக்கமற்ற கொள்வனவு தொடர்பாக பரீட்சித்து பொறுப்பினை நிர்ணயித்தல் வேண்டும். |
| (ஊ) | மீன் மொத்த விற்பனை சந்தையை நிர்மாணிக்கும் போது ரூபா 44,549 மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. | மிகையாக செலுத்திய பணத்தை இறுதி விலைபட்டடியலிலிருந்து அறவீடு செய்வேன். | மிகைக் கொடுப்பனவினை அறவீடு செய்தல் வேண்டும். |

## 3.6 மனிதவளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கையை மிகைத்து பதவி வகிப்பவர்களுக்கு தனிப்பட்ட வகையில் நிரந்தரமாக்கப்பட்ட 157 வேலையாட்கள் வேலையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தும் முறைப்படியான அங்கீகாரமின்றி 65 வேலையாட்கள் 40 சேவை உடன்படிக்கைகளின் அடிப்படையில் உரிய துறைக்கு சேர்த்துக்கொள்ளப்பட்டு 2023 ஆம் ஆண்டிற்கு ரூபா 23,800,865 தொகையான சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. மிகை ஊழியர்களில் அதிக அளவானவர்கள் நிருவாக அலுவலகத்தில் நூல் | நூல் நிலைய ஆளணியினர் மற்றும் முன்பள்ளிகளுக்கு ஈடுபடுத்தப்பட்டுள்ள இரண்டு சேவை உடன்படிக்கை ஊழியர்களுக்காகவும் கடமை ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. | மிகை ஊழியர்களுக்காக முறையான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டியதுடன் அனைத்து ஊழியர்களும் வினைத்திறனாக சேவையில் ஈடுபடுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிலையத்தில் மற்றும் முன்பள்ளிகளில் நிரந்தர வேலைகள் ஒப்படைக்கப்படாது சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | | |
| (ஆ) | அங்கீகரித்த கண்காணிப்பாளர்களின் எண்ணிக்கை 10 ஆக அஇருந்த போதிலும் எழுத்துமூல கடமை ஒப்படைப்புச் செய்யப்படாது 29 நிரந்தர பதவி வேலையாட்கள் வேலை கண்காணிப்பு செயற்பாட்டில் ஈடுபட்டிருந்தனர். உண்மையாக கடமையில் ஈடுபடுகின்ற 57 நபர்களின் வேலைகளை மேற்பார்வை செய்வதற்கு 29 வேலை கண்காணிப்பாளர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை பிரச்சினைக்குரிதாகும். | வேலையாட்கள் நியமனங்களைப் பெற்ற ஊழியர்கள் கண்காணிப்பாளராக நீண்டகாலமாக கடமையாற்றியுள்ளனர். வெற்றிடமான 05 கண்காணிப்பாளர்களை நிரப்புதல் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுவதுடன் வேலை வெளிக்கள கண்காணிப்பாளர்களாக இருக்கின்ற 09 நபர்கள் வெளிக்கள வேலையாட்களாக சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என தெரிவிக்கிறேன். | அனைத்து ஊழியர்களையும் வினைத்திறனாக சேவையில் ஈடுபடுத்துதல் வேண்டும். |
| (இ) | இரத்தினபுரி பொது நூல் நிலையம் உள்ளடங்கலாக 18 நூல் நிலையங்களில் 12 நூல் நிலையங்களின் வாசகர்களின் எண்ணிக்கை 06 இற்கும் 15 இற்கும் இடைப்பட்ட குறைந்த எண்ணிக்கையாகும். ஒரு நூல் நிலையத்தில் எந்தவொரு செயற்பாட்டு அங்கத்தவரும் இல்லாததனால் அதன் ஊழியர்களுக்காகச் செலுத்தப்பட்ட ரூபா 994,200 தொகையான வருடாந்த சம்பளம் ஒரு விளைவற்ற செலவாக இருந்தது. அவ்வாறே இரத்தினபுரி பொது நூல் நிலையத்திற்கு 11 வேலையாட்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதனால் 06 மிகை வேலையாட்களுக்காக வருடாந்தம் ரூபா 3,045,430 தொகை விளைவற்றதாக சம்பளமும் படியும் செலுத்தப்பட்டிருந்தது. | ஒரு நூல் நிலையம் மூடப்பட்டு அதனை கழிவுப் பொருள் சேகரிக்கும் நிலையமாக பராமரிப்பதற்கு குழுத் தீர்மானம் கிடைத்துள்ளது. இத்தினபுரி பொது நூல் நிலையத்தில் சுத்திகரிப்பு செயற்பாட்டினை உள்ளடக்கி அனைத்து செயற்பாடுகளையும் நிறைவேற்ற வேண்டியுள்ளதனால் இந்த ஊழியர்கள் வினைத்திறனாக சேவையில் ஈடுபட்டுள்ளனர். | சபையின் சொத்துக்களும் மனித வளங்களும் வினைத்திறனாக பயன்படுத்தப்படுதல் வேண்டும். |

### 3.7 வாகன பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| முன்னாள் வேலை அத்தியட்சகரின் மற்றும் லொறிச் சாரதியின் பிழையினால் ஏற்பட்ட விபத்தின் மூலம் மோட்டார் சைக்கிலுக்கு ஏற்பட்ட ரூபா 108,750 தொகையான நட்டத்தினை அவரிடமிருந்து அறவிடப்பட்டிருக்காததுடன் காப்புறுதி பிரதிபலன்களும் கிடைத்திருக்கவில்லை. உடைந்த மோட்டார் சைக்கிள் களஞ்சியத்தில் பயன்படுத்தப்படாது காணப்பட்டது. | இது சம்பந்தமான தொடக்க புலனாய்விற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையின் பிரகாரம் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வேன். காப்புறுதி இழப்பீட்டுப் பணத்திற்காக நடவடிக்கை எடுக்க முடியாது என காப்புறுதி ஒம்புட்ஸ்மன் தெரிவித்துள்ளார். | பொறுப்பினை நிர்ணயித்து நட்டத்தை அறவீடு செய்தல் வேண்டும். |

### 3.8 வெளிப்படையான ஒழுங்கீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மாநகர சபை கட்டிடத்தினை மேம்படுத்தும் போது கொள்வனவு செய்த ரூபா 971,631 தொகையான மின்சார உதிரிப்பாகங்கள் காணாமல் போயிருந்தன. | பதில் வழங்கப்படவில்லை. | பொறுப்பினை நிர்ணயித்து நட்டத்தை அறவீடு செய்தல் வேண்டும். |